# இலங்கையில் உத்தேச அரசியலமைப்பில் பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் பரிந்துரைகளும் அதன் நடைமுறைச்சவால்களும்
# Recommendations and its practical Issues of Public Recommendation Committee in New Constitutional Draft of Sri Lanka

**M.B. Safna Sakki, A. Fathima Sinfa, M.Y.M. Yoosuff Imran**
Department of Political Science
South Eastern University of Sri Lanka
safna.sakee@gmail.com, sinfa.sby@gmail.com, mymy.imran@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

அரசொன்றின் அரசாங்கத்தின் அமைப்பு, அதிகாரம், தொழிற்பாடு ஆகியவற்றையும் அவ்வரசின் எல்லைக்குட்பட்ட மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் அம்மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகளையும் தெளிவாக விளக்கும் விதிகளின் தொகுப்பு அரசியல் யாப்பாகும். இத்தகு அரசியல் யாப்பானது அரசாங்கத்திற்கான வழிகாட்டியாக அமைவதோடு நவீன அரசுகள் தமது அதிகாரத்தை வரையறுத்து ஆட்சி செய்வதற்கும் துணைபுரிகின்றது. இலங்கையிலும் பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்காலத்திலிருந்து பல்வேறு அரசியலமைப்புக்கள் கொண்டு வரப்பட்டு அதனூடாக ஆட்சி முறைகள் அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளன. அந்தவகையில் தற்போது நடைமுறையிலிருக்கும் 2ம் குடியரசு யாப்பானது இன ரீதியான பாரபட்சங்களை உள்ளடக்கிய பல்வேறு குறைபாடுகளையும் தன்னகத்தே உள்ளடக்கியிருப்பதாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து இலங்கை வாழ் மக்களது அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையிலான புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் கருத்தறி குழுவினை தாபித்திருந்தது. இதனூடாக பொது மக்களின் கருத்துக்களும் ஒன்று திரட்டப்பட்டுள்ளன. இவ்வாறு ஒன்று திரட்டப்பட்டுள்ள யோசனைகளும் பரிந்துரைகளும் பல்லின மக்கள் வாழும் இலங்கையில் நடைமுறைக்கு எவ்வாறு சாத்தியமானதாக அமையும் என்பதனை ஆய்வுப்பிரச்சனையாகக் கொண்டும் இக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளானது இலங்கையின் இனப் பிரச்சனைக்கு தீர்வாகஅமையுமா என்பதை கண்டறிதல், இது தொடர்பிலானசர்வதேச சமூகத்தின் பார்வையினை திருப்திப்படுத்துமா என்பதை கண்டறிதல், புதிய அரசியலமைப்பு குறித்த புதிய அரசாங்கத்தின் பங்களிப்பினை அறிந்து கொள்ளுதல் என்பவற்றை நோக்காகக்கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளானது நேர்காணல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலமாகவும் இரண்டாம் நிலைத்தரவுகளானது மக்கள் கருத்தறி குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை, பத்திரிகை மற்றும் இணையத்தளக் குறிப்புக்கள் என்பவற்றின் மூலமாகவும் பெறப்பட்டுள்ளன. மேற்படி சேகரிக்கப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் மூலமாக புதிய அரசியலமைப்பு உருவாக்க யோசனைகளின் சாதக, பாதக அம்சங்களை இனங்கண்டு அவற்றின் நடைமுறைச்சவால்களை வெளிக்கொணர்ந்து அதன்மூலம் இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன ரீதியான அடக்குமுறைகளை அகற்றி அவர்களுக்கிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவே இதனை கருத முடியும். அத்துடன் இலங்கை வரலாற்றில் ஓரளவு மக்களது கருத்துக்களை செவிமடுத்து தயாரிக்கப்பட்ட முதலாவது அரசியல் திட்டம் என்ற அடிப்படையில் இது முக்கியத்துவம் பெறுவதனையும் இவ்வாய்வினூடாக கண்டு கொள்ளலாம்.

***Keywords**: Constitution, Good governance, Public Opinion, Government*

## அறிமுகம்

இன்றைய உலகில் காணப்படும் அரசுகளானது அரசியல் யாப்புக்களினூடாகவே தமது அதிகாரங்களை வரையறுத்து ஆட்சி செய்து வருகின்றன. அரசியல் யாப்பு என்பது ஒரு நாட்டின் அதிகாரப்பங்கீட்டையும் அதன் தொழிற்பாட்டையும்

நிர்ணயிக்கக்கூடிய கொள்கைகள் அடங்கிய அடிப்படைச்சட்டமாகும். ஆட்சியாளர்கள் மனம்போன போக்கிலும் தவறான முறையிலும் ஆட்சி நடாத்துவதை தவிர்ப்பதற்கும் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் அரசியல் யாப்பு அவசியமானதாகும். (யோதிலிங்கம், 2004)

இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றினை எடுத்து நோக்குகின்ற போது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோல்புறூக் முதல் சோல்பரி வரையான அரசியலமைப்பு திட்டங்களும் சீர்திருத்தங்களும் அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன் சுதந்திரத்திற்கு பின்னர் முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு அரசியலமைப்புக்கள் சுதேசிகளினால் இயற்றப்பட்டன. இருப்பினும் சுதேசிகளின் இவ்யாப்புக்களானவை பல்லின சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மாறாக கட்சிகளின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு காணப்படுவதுடன் இலங்கையின் இனப்பிரச்சனை உத்வேகம் அடைவதற்கும் வழிவகுத்திருந்தன. இதனால் 1978 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமுல்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியலமைப்பானது அதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பல்வேறு திருத்தங்களுக்கும் உட்பட்டுள்ளது (யோதிலிங்கம்,2004).

இலங்கையில் 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து உதயமான புதிய தேசிய அரசாங்கமானது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து இலங்கையின் பல்லின மக்களுக்கும் ஏற்றவாறான அரசியலமைப்பினை உருவாக்குவதற்காக பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக “ அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொது மக்கள் கருத்தறி குழு’’ ஒன்றை தாபித்திருந்தது. இக்குழுவில் ஆரம்பத்தில் பல்லின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 19 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இக்குழுவானது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பகிரங்க அமர்வுகளை நடத்தி பொதுமக்களிடமிருந்து அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான வாய் மூல மற்றும் எழுத்து முல சமர்ப்பனங்களை திரட்டுவதற்கும் அவர்களது கருத்துக்களை அறிந்து 3மாத காலத்தினுள் பொது மக்களது கருத்துக்கள், அபிலாசைகள் குறித்து குழுவின் விதப்புரைகளுடனான இறுதி அறிக்கையினை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாக்கப்பட்டிருந்தது. இதன்படி 2016.01.05 ஆம் திகதி தமது முதலாவது குழு அமர்வினை மேற்கொண்டு நடவடிக்கைகளை திட்டமிடும் நோக்கில் பல்வேறு கூட்டங்களையும் நடாத்தியிருந்தது. சுமார் 20 விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பில் சீர்திருத்தங்களை கொண்டு வரும் முகமாக பொது மக்களிடம் கருத்துக்களை சேகரிப்பதற்கு தீர்மானித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 நாட்கள் என்றஅடிப்படையில் பகிரங்க அமர்வுகளை நடாத்தி பொதுமக்கள் கருத்துக்களை திரட்டியதோடு அவற்றை இணையத் தளங்களினூடாகவும் ஊடக மகாநாடுகள், கலந்துரையாடல்கள் என்பவற்றி னூடாகவும் பொது மக்களுக்கு தெரியப்படுத்தியிருந்தது. 2016.03.05 ஆம் திகதியுடன் மாவட்ட அமர்வுகள் நிறைவடைந்ததுடன் ஜனாதிபதி,பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரை சந்தித்து குழுவின் செற்பாடுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகளினூடாக பெற்றுக்கொண்ட பொதுமக்களின் கருத்துக்களை ஆராய்ந்து விதப்புரைகளுடனான அறிக்கையொன்றினை அரசியலமைப்பு பேரவைக்கு 2016.05.10 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தது. அந்தவகையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான பொதுமக்கள் கருத்தறி குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்க யோசனைகளுள் இரண்டாம் மன்றம், உப ஜனாதிபதி, மாகாண ஆளுனர் நியமனம், மதம், மொழி உரிமைகள் என்பன தொடர்பான பரிந்துரைகள்

எந்தளவிற்கு பல்லினமக்கள் வாழும் இலங்கை சமூகத்தில் நடைமுறைக்கு சாத்தியமானது என்பதனைவிமர்சன ரீதியாக ஆராய்வதாகவே இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**ஆய்வுப்பிரச்சனை**

பல்லின மக்கள் வாழும் இலங்கையில் சகல மக்களினதும் அபிலாசைகளையும் எண்ணங்களையும் நிவர்த்தி செய்யும் வகையிலான அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியமற்றதொன்றாகும். இவ்வாறானதொரு நிலையில் புதிய தேசிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகளுள் ஒன்றான பொதுமக்கள் கருத்தறி குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு யோசனைகளும் பரிந்துரைகளும் நடைமுறையில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆய்வுப்பிரச்சனையாகக்கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

‘‘இலங்கையில்புதிய அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளும் அதன் நடைமுறைச்சவால்களும் : ஒரு விமர்சன பகுப்பாய்வு’’ என்ற தலைப்பிலமைந்த இவ்வாய்வானது புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் பொது மக்கள் கருத்தறி குழுவின் பங்களிப்பு எத்தகையது என்பதை கண்டறிவதுடன் அதன் நடைமுறைச்சவால்களையும் கண்டறிவதாக அமைந்துள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது சமூக விஞ்ஞான ஆய்வாக காணப்படுவதனால் இவ்வாய்வுக்கு பண்பு ரீதியான தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இத்தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களிலிந்தும் பெறப்பட்டுள்ளன. இங்கு முதலாம் நிலை தரவு மூலாதாரங்களாக நேர்காணல்,கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களாக புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்தறி குழுவின் அறிக்கை, பத்திரிகை மற்றும் இணையத்தளக் குறிப்புக்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நேர்காணலானது சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கல்வியியலாளர்கள், அரசியல் தலைவர்கள், சமூகக்குழு தலைவர்கள், விரிவுரையாளர்கள், மத தலைவர்கள் என்போரிலிருந்து எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நேர்காணலுக்குட்படுத்தப்பட்டனர்.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பானபொதுமக்கள் கருத்தறி குழுவானது பல்வேறு விடயங்கள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ள போதிலும் இவ்வாய்வானது பின்வரும் முக்கிய விடயங்கள் தொடர்பில் பகுப்பாய்வு செய்துள்ளது.

01. உப ஜனாதிபதி முறைமை: இவ் உத்தேச அரசியலமைப்பு யோசனைகளுள் மிக முக்கியமான அம்சமாக சிறுபாண்மை இனம் சார்பில் நியமிக்கப்படும் உப ஜனாதிபதி பதவியை குறிப்பிடலாம். இப்பதவியானது சிறுபாண்மை மக்களை திருப்திப்படுத்தக்கூடிய வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நடைமுறையில் சவால்களை கொண்டதாக காணப்படுகின்றது. அதாவது சிறுபாண்மை இனம் எனும் போது முஸ்லிம், தமிழர் மற்றும் இந்தியத்தமிழர் ஆகியோர் உள்ளடங்குவதனால் எவ் இனத்தவருக்கு இப்பதவியை வழங்குதல், குறித்த இனத்துக்கு வழங்கப்படுகின்ற போது அவ் இனம் சார்பாக பல கட்சிகள்

காணப்படுமாயின் எக்கட்சிக்கு வழங்குதல் மற்றும் உப ஜனாதிபதியின் அதிகாரம், தொழிற்பாடு என்பன தொடர்பாக தெளிவாக வரை யறுக்கப்படவில்லை.

02. மாகாண ஆளுனர் நியமனம்: மாகாண சபைகளின் சுயாதீன தன்மையினை கேள்விக்குட்படுத்தும் வகையில் ஆளுனர்களின் தலையீடு காணப்படுகின்றமையை நீக்கும் வகையில் மாகாணஆளுனர்கள் முதலமைச்சரின் சிபாரிசினடிப்படையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும் எனகுறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி நியமிக்கப்படுகின்ற ஆளுனர் முதலமைச்சரின் செல்லப்பிள்ளையாக தொழிற்படும் நிலை, ஆளும் கட்சியின் பிரதிநிதியாக தொழிற்படும் நிலை என்பன காணப்படும். எனவே ஆளுனர் நியமனம் அரசியலமைப்புபேரவையின் சிபாரிசினடிப்படையில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுவதுடன் ஆளுனர் மாகாணசபை நிர்வாகத்தில் தலையீடு மேற்கொள்ளாத வண்ணம் ஆளுனரின் அதிகாரம் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

03. செனட் சபை: ஒற்றையாட்சி முறையின் கீழ் 2ம் மன்றமாக செனட் சபை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாகாண முதலமைச்சர், மாகாண ரீதியில் 6 உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் என்போரை உள்ளடக்கிய வகையில் 75 உறுப்பினர்களை உள்ளடக்கிய செனட் சபை தொழிற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்றமானது 1ம் மன்றத்தின் தான்தோன்றித்தனமான போக்குகளை கட்டுப்படுத்துதல் மற்றும் சிறுபாண்மை நலன் பாதுகாக்கப்படுதல் போன்ற நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டது என குறிப்பிடப்பட்டாலும் சமகால உலகில் 2ம் மன்றங்கள் வினைத்திறனற்றதாக காணப்படுவதும் அதிக செலவினைஏற்படுத்தக்கூடியதாக காணப்படுகின்றமையும் சோல்பரி அரசியல் யாப்பின் கீழான செனட் சபை சிறுபாண்மையினரை பாதுகாக்கதவறியமையும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளாகும். இதனடிப்படையில் செனட் சபையானது வீண் செலவை ஏற்படுத்தும் ஒன்றே என குறிப்பிடலாம்.

04. மாகாணங்களுக்கு குறைந்தளவு பொலிஸ் அதிகாரம்: புதிய அரசியலமைப்புக்கான பரிந்துரைகளுள் முக்கிய விடயமாக மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரத்தை குறிப்பிடலாம். 13 ஆம் திருத்தத்தின் மூலமாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட முழுமையான பொலிஸ் அதிகாரமானது உத்தேச யாப்பு பரிந்துரையில் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதன் தன்மை, தொழிற்பாடு மற்றும் அதிகாரம் தொடர்பில் தெளிவான முறையில் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

05. மாகாணங்கள் தனித்து இயங்குதல்: தற்போதைய அரசியல் யாப்பின் 154வது உறுப்புரையின் 2 ஆம் உப பிரிவானது அகற்றப்படல் வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதாவது சுயாதீனமான இரு மாகாணங்கள் இணைந்து ஒரு மாகாணமாக செயற்பட முடியும் என்ற அம்சமானது மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பரிந்துரையானது சிறுபாண்மையினரான தமிழ் மக்களின் நீண்ட கால சமஸ்டி கோரிக்கையினை மறுதலிப்பதாக அமைந்துள்ளதுடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை புறக்கணிப்பதாகவும் அமையப்பெற்றுள்ளது. அதேவேளை முஸ்லிம் மக்களும் வட கிழக்கு இணைவிற்கு ஆதரவு தெரிவிக்காத நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இது கசப்புணர்வினை ஏற்படுத்துவதாகவும் அநைந்துள்ளது.

06. மதம்: புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான பரிந்துரைகளுள் மதம் குறித்த அம்சமானது பிரதானமானதாகும். நடைமுறையிலுள்ள 2ம் குடியரசு அரசியல் திட்டமானது பௌத்த மதம் எனும் அத்தியாயத்தை உருவாக்கி அதன்மூலம் பௌத்த மதத்திற்கு அதியுயர் அந்தஸ்தை வழங்கி அதனை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் வித்திடுகின்ற அதேவேளை கருத்தறி குழுவானது அரசானது மதச்சார்பற்றதாகவும் மதம் அரசின் செயற்பாட்டெல்லைக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கவேண்டும் எனவும் பௌத்தம் என்ற அத்தியாயத்திற்கு பதிலாக மதம் என்ற அத்தியாயம் புதிய அரசியலமைப்பில் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது. இந்நிலையானது இன ரீதியான பாகுபாட்டை இல்லாதொழிப்பதற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு சகல மதத்திற்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளமையானது நிறைவாக இருப்பினும் ஒரு சிலரால் விமர்சிக்கப்பட்டும் வருகின்றது. அந்தவகையில் கடந்த காலங்களில் பௌத்த பிக்கு ஒருவர் மத ரீதியான சமவுரிமையானது முன்னர் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டிருந்த முன்னுரிமையை பறித்தெடுப்பதாக அமைந்திருக்கின்றது என குறிப்பிட்டிருக்கின்றமையும் ஜனாதிபதி,பிரதமர்,கர்தினல் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட முக்கிய பிரமுவர்கள் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் கூறியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

07. மொழி உரிமைகள்: மொழியுரிமை சம்மந்தமான சமர்ப்பனங்களுள் அரசினுள் இருக்கும் சகல நிறுவனங்களிலும் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் சிங்களத்தையும் தமிழையும் அரச கரும மொழியாகவும் தேசிய மொழியாகவும் மற்றும் நிர்வாக மொழியாகவும் பிரகடணப்படுத்த வேண்டும் என்றகருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையானது மொழி ரீதியான சமத்துவத்தை ஏற்படுத்துவதாகவும் இன ஒடுக்குமுறைகள் மீள் எழுவதை தடுப்பதாகவும் அமையும் என எதிர்பார்க்கலாம்.

**முடிவுரை**

இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றினை எடுத்து நோக்குகின்ற போது தற்போது பொது மக்கள் கருத்தறி குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பானது இதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புக்களுடன் ஒப்பிடுகின்ற போது அது மக்கள் மயப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தன்மை பொருந்திய ஒன்றாக காணப்படுவதனை அவதானிக்கலாம். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு பொதுமக்கள் கருத்துக்களை அறிந்து கொண்டு அதனடிப்படையில் யாப்பினை உருவாக்கும் நோக்கில் கருத்தறி குழுவானது நியமிக்கப்பட்டு அதன் பின்னணியில் யாப்பானது முன்வைக்கப்பட்டமையானது ஜனநாயகத்தன்மையை பறைசாட்டுவதாகவே அமைகின்றது. இவ்வாறுமக்கள் மயப்படுத்தப்பட்ட யாப்பினை உருவாக்குவதற்கான அடிப்படை நோக்கமானது இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதனூடாக இன முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதேயாகும். இத்தகைய நோக்கத்தை அடைந்து கொள்வதில் புதிய அரசியலமைப்பு உருவாக்க பரிந்துரையானது முழுமையாக பங்களிப்புச் செய்வதில் பல்வேறு நடைமுறைச்சிக்கல்கள் காணப்படினும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அடித்தளத்தினை வகுத்திருக்கின்றது என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே தான் புதிய அரசியலமைப்பு பரிந்துரையானது எந்தளவிற்கு சாதகமானதாக அமையும் என்பதனை எதிர்காலத்தில் கண்டு கொள்ளலாம்.

**உசாத்துணைகள்**

01. யோதிலிங்கம்.சி.அ,(2004),அரசியல் யாப்புகள், குமரன் புத்தக இல்லம்.

02. பொதுமக்கள் கருத்தறி குழுவின் அறிக்கை.

03. Rohantha Desilva(21,march 2016) "Sri Lankan parliament to draft new constitution to shore up capitalist rule" http://www.wsws.org/en/articles/2016/03/21/sril-m21.html?view=article-mobile. Accessed on 2016.07.09.

04. Sarath Wijesinghe (17,January,2016), "New constitution for sri lanka", http://www.colombotelegraph.com/index.php/new-constitution-for-sri-lanka/ Accessed on 2016.07.09.

05. http://srilnkaconstitution.wodpress.com. Accessed on 2016.07.07.